# மரபு நம் உரிமை! அதை மீட்டெடுத்தல் தமிழர்தம் கடமை!

## மதுரையில் – திருமலை நாயக்கர் அரண்மனை ஒளிர்வதையொட்டி – சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



சென்னை, ஜூலை 28-

**நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவின் சமூக வலைதளப் பதிவை மேற்கோள்காட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவு வருமாறு:-**

தூங்கா நகருக்கு மேலும் எழில் கூட்டிடும் வகையில் திருமலைநாயக்கர் அரண்மனை ஒளிர்கிறது! கண்களைக் கவர்கிறது!

சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் அதிகம் காணும் பகுதிகளாக கீழடியும் – இந்த அரண்மனையும் திகழட்டும்!

இவற்றைப் போலவே, நெல்லையில் 'பொருநை அருங்காட்சியகம்' திறப்பதற்கான பணிகள் தொல்லியல் துறை சார்பில் விரைந்து முடிக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.

**மரபு நம் உரிமை; அதை மீட்டெடுத்தல் தமிழர்தம் கடமை!**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



முதலமைச்சர் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு மணம் பூண்டி ஒன்றியம், அந்திலி ஊராட்சியிலிருந்து பா.ஜ.க மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் அய்யப்பன் தலைமையில் 100 க்கும் மேற்பட்டோர். உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதம.சிகாமணி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ பிரபு, பிரேமா அல்போன்ஸ் துணைச் செயலாளர் இரா.கற்பகம்,பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ் அன்பு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ராஜீவ் காந்தி, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை மெட்ரோ போன்ற மிகப்பெரிய திட்டத்தைச் செயல்படுத்தும்போது

# அனைத்துச் சமூகத்தினரின் மத உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படுகிறது!

## யூ டியூப்பில் எச்.ராஜாவின் தவறான – தீங்கிழைக்கும் கருத்துகள் பரவுவதற்கு சென்னை மெட்ரோ இணை இயக்குநர் விளக்கம்!

*சென்னை, ஜூலை 28-*

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மூத்த அலுவலர்களுக்கு எதிராக எச்.ராஜா அவர்கள் சில தவறான மற்றும் தீங்கிழைக்கும் கருத்துகளை தெரிவித்துள்ளார் என்று எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. இந்த தவறான தகவல் பல்வேறு ஊடகங்கள் மற்றும் Youtube சேனல்களில் வெளியிடப்பட்டு இன்று பரப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்த தவறான தகவல், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணியில் 3வது வழித்தடத்தின் ஒரு பகுதியான ஆயிரம் விளக்கு மெட்ரோ இரயில் நிலையம் அமையவுள்ள இடத்தில் துர்கை அம்மன் கோயில் மற்றும் ரத்ன விநாயகர் கோயிலை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தேவையில்லாமல் இடித்து வருவதாகவும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சில உயர் அலுவலர்களை குற்றம் சாட்டுவதாகவும் கூறுகிறது. அத்தகைய தகவல்கள் தவறானவை மற்றும் முழுமையான விவரங்களை அறியாமலேயே கூறப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ திட்டத்தை தாமதமின்றி மற்றும் திறம்பட நிறைவு செய்வதற்கான நோக்கத்துடன் மட்டுமே சட்டபூர்வமாகவும் கடமையுடன் தங்கள் பொதுப் பணிகளைச் செய்து வருகின்றனர். பொதுமக்கள் பெருமளவில் பயன்பெரும் மிகப்பெரிய திட்டத்தைச் செயல்படுத்தும் போது, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளை மாற்றுவது / சில இடங்களில் இடமாற்றம் செய்வது சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாதவை. இதில் மத நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களும் அடங்கும். இது சட்டத்தின் முறையான செயல்முறையைப் பின்பற்றி செய்யப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் எந்த வகையிலும் எந்த மத சார்பும் இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்றன.

சமீபத்தில், சாத்தியமான இடங்களில், 2018ல் அங்கீகரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி இடித்தல், மாற்றம் மற்றும் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய சில கோயில்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் சில பணிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மாற்றி செயல்படுத்தியுள்ளது. தற்போது கட்டப்பட்டு வரும் நிலையத்தின் வடிவமைப்பு, ஒயிட்ஸ் சாலையில் அமைந்துள்ள துர்க்கை அம்மன் கோயிலின் சுமார் 15 ஆண்டுகள் பழமையான நுழைவு கோபுரம் மற்றும் ஸ்ரீ ரத்ன விநாயகர் கோயிலை இடமாற்றம் செய்வது என்பது 2018 ஆம் ஆண்டு விரிவான திட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

துரதிஷ்டவசமாக, சுரங்கப்பாதை கட்டுமான வடிவமைப்பின் கட்டுப்பாடுகள் காரணத்தினால் மேற்கூறிய கட்டமைப்புகளின் மாற்றம்/இடமாற்றத்தைத் தவிர்க்க முடிய வில்லை. இந்த விவகாரம் தற்போது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

பொதுமக்கள் பெருமளவில் பயன்பெரும் மிகப்பெரிய திட்டத்தைச் செயல்படுத்தும் போது, அனைத்து சமூகத்தினரின் மத உணர்வுகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உரிய மதிப்பளித்து செயல்படுகிறது என்று மீண்டும் வலியுறுத்தப்படுகிறது என்று சென்னை மெட்ரோ இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### தனியார் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்

# செல்வி சௌந்தர்யா மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, ஜூலை 28-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தனியார் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்து வந்த செல்வி. சௌந்தர்யா (வயது 30) அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 26.07.2024 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மனவருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், ஊடகம் மற்றும் பத்திரிகை துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு

# ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தல்!



*நாமக்கல், ஜூலை 28-*

மாநிலங்களவை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2021-22 ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில், ஒன்றிய அரசின் நிதியமைச்சர், கடந்த ஆகஸ்ட் 17, 2021 அன்று பொது முதலீட்டு வாரியம் மூலம் சென்னை மெட்டோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக ரூ. 63,246 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததாக அறிவித்தார். எனினும், இந்த திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக பொருளாதார விவகாரங்களுக்காக அமைச்சரவைக் குழுவின் (CCEA) ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இந்த தாமதத்தால் தமிழ்நாடு அரசே முழு செலவையும் ஏற்று பணிகளை செயல்படுத்தி வருகிறது.

ஒன்றிய அரசின் தாமதத்தால் மாநிலத்தின் நிதிநிலையை கடுமையாக பாதிக்கிறது. இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் டோகன் சாஹூ அவர்களிடம் நான் ஒரு கேள்வியை எழுப்பினேன், அதற்கு 118.9 கிலோமீட்டர் சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டத் திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது என்றும், திட்டத்தின் அனுமதி சாத்தியக் கூறுகளைப் பொறுத்தது என்றும் பதில் அளித்துள்ளார்.

சென்னை மெட்ரோ மக்கள் தொகை சுமார் 1.2 கோடி என மிகப் பெரிய அளவில் உள்ளது. இதனால் ஒரு சதுர கி.மீ.க்கு 26,533 பேர் என்ற மக்கள் தொகை அடர்த்தியின் காரணமாக சென்னை நகரில் போக்குவரத்து பரபரப்பாக உளளது. மெட்ரோ நெட்வொர்க்குகள் உள்ள டெல்லி மற்றும் பெங்களூரு போன்ற பெரிய மக்கள் தொகை கொண்ட மற்ற நகரங்களை ஒப்பிடுகையில், சென்னை மக்கள் பெருநகரங்களுக்கு இணையாக நாள்தோறும் சுமார் 25 கி.மீ தூரம் பயணித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மெட்டோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக மீண்டும் நிதியுதவி வழங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்ட திட்டத்திற்கு மத்திய அரசு முன்பு அறிவிக்கப்பட்ட நிதியை ஒதுக்க வேண்டும். ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களையும் ஒரு தாய் போல சமமாக நடத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

### கழக விவசாய அணிச் செயலாளர்

# ஏ.கே.எஸ்.விஜயன் சகோதரி யமுனா அம்மையார் மறைவு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – கழகத்தினர் அஞ்சலி!



*திருவாரூர், ஜூலை 28-*

கழக விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே. எஸ். விஜயன் சகோதரி யமுனா அம்மையார் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவிற்கு தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த யமுனா அவர்கள், மருத்துவர் சம்பத்குமார் அவர்களின் மனைவியாவார். இவர்களுக்கு மூன்று மகன்கள். அதில் ஒருமகனான மருத்துவர் அரவிந்தன் மறைவெய்திவிட்டார். யமுனா அவர்கள் உடல்குறைவால் சென்னையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (26.07.2024) மறைவெய்தினார்.

கழக விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே. எஸ்.விஜயன் சகோதரியான மறைந்த யமுனா அம்மையார் அவர்களின் உடல் தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலையில் உள்ள ஈஸ்வரி நகரில் அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு, இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அம்மையாரின் உடலுக்கு நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களை சேர்ந்த கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் நேற்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு தஞ்சையில் நடைபெற்றது.



பெரம்பலூர் நகரப்பகுதியில் துறையூர் சாலையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இயக்கி தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, நகர்மன்றத் தலைவர் அம்பிகா இராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி (ஆலத்தூர்) க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ம.ராஜ்குமார், நகராட்சி ஆணையர் இராமர், நகர்மன்றத் துணைத் தலைவர் ஆதவன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை.பாஸ்கர், மகாதேவி ஜெயபால், டாக்டர் அ.கருணாநிதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கர்நாடக மாநிலத்தில்

# உயிரிழந்த ஓட்டுனர் குடும்பத்திற்கு நிவாரண நிதி!

## சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் வழங்கினார்!

*கிருஷ்ணகிரி, ஜூலை 28-*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் கடந்த 16.07.2024 அன்று LPG டேங்கர் லாரியில் ஓட்டுநராக சென்றபோது கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்த லாரி ஓட்டுநர் முருகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் தெரிவித்ததோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் வழங்க 25.07.2024 அன்று உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, ஆகியோர் லாரி ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அவரது மனைவி செவ்வந்தி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்கள். மறைந்த முருகன் அவர்களுக்கு திவ்யஸ்ரீ என்கிற மகளும், மேகன் என்ற மகனும் உள்ளனர். இந்நிகழ்வில், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மரு.மாலதி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி, பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



கோவை தெற்கு மாவட்டம், ஆனைமலை வடக்கு ஒன்றியம், சுங்கம் கிளை கழகத்தில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் தலைமை வகித்தார். ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நிசாந்த், சபரி கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மருதமுத்து, திருநாவுக்கரசு, மைதீன், மனோஜ்குமார், அழகிரி, ஜெய்லானி, சதாம் உசேன், கார்த்தி, தினேஷ், அஸ்வின் பாலா மற்றும் இளைஞரணி தோழர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்கொல்லை பகுதியில், போக்குவரத்துத்துறையின் சார்பில், அறந்தாங்கி முதல் ஆலங்குடி வரை புதிய நகர பேருந்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 26.07.2024 அன்று துவக்கி வைத்தார். உடன் பொதுமேலாளர் (த.அ.போ.க.) (புதுக்கோட்டை மண்டலம்) இரா.இளங்கோவன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.